மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM தේසියම්



Smart Fly

ARUN WINGS TRAVELS & TOURS

கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு

விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்

ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd

143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680

arunwingslanka@gmail.com



மலர்: 02 | இதழ்: 142 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஞாயிற்றுக்கிழமை 28.01.2024 | பக்கங்கள் 10




## பொலிசாரின் லஞ்ச ஊழல்களே குற்றச் செயல்கள் விபத்துக்களுக்கு காரணம்!

### வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!

பக்கம்–02

## நீதிமன்றத்துக்குப் போகப்போவதாக மிரட்டிய சுமோவும்!

### எதற்கும் தயாரென்று சீறிய சிறீதரனும்!



பக்கம்–06

## ஆஸி பழங்குடியின மக்களின் யாபூன் திருவிழாவில் ஈழத்தமிழர்கள்!






பக்கம்–03

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சட்ட மாநாடு!



பக்கம்–08

## ஆரையம்பதி ஆரையூர் விளையாட்டுக்கழகத்தில் மாபெரும் இரத்த தான முகாம்!



பக்கம்–07

## யாழில் ஆரம்பமான புகைப்பட கண்காட்சி!






பக்கம்–09

**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

**Whatsapp +94 76 567 3339**

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME

# பொலிசாரின் லஞ்ச ஊழல்களே குற்றச் செயல்கள் விபத்துக்களுக்கு காரணம்!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!



நாட்டில் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து செல்கின்ற சமநேரம் வீதிகளின் விபத்துக்களின் எண்ணிக்கையும் அதனால் அப்பாவிகளின் உயிர்கள் காவு கொள்ளப்படும் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது காரணம் சட்ட ஒழுங்குகளை கண்காணிக்கும் தரப்பிடம் மேலோங்கியுள்ள லஞ்ச ஊழல் செயல்களே ஆகும்.

நாட்டில் வன்முறைகளில் ஈடுபடும் குற்றவாளிகள் அதிகரிப்பதற்கான உண்மையான காரணத்தை அரசாங்கம் இதுவரை கண்டறியவில்லை அதற்கான முயற்சிகளும் இடம்பெறவில்லை காரணம் ஆட்சித் தரப்பில் உள்ள ஊழல் மோசடிகள் மறைக்கப்படுவதற்காக இரண்டாம் மட்ட லஞ்ச ஊழல்கள் தடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு லஞ்ச ஊழல் மோசடிகளே பிரதான காரணம் ஆகும்.

வீதி விபத்துக்கள் அதிகரிப்பதில் முறையற்ற வகையில் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுதல், போதையில் வாகனம் செலுத்துதல், தண்டனைக்குரிய குற்றச் செயல்களுடன் போக்குவரத்து கண்காணிப்பு பொலிசாருக்கு லஞ்சம் வழங்கி வீதிகளில் வாகனங்கள் செலுத்தும் நபர்களினால் நாளாந்தம் விபத்துக்கள் அதிகரிக்கின்றன ஆகவே நாட்டில் குற்றச் செயல்கள் மற்றும் விபத்துக்கள் அதிகரிப்பதற்கு லஞ்ச ஊழல் மோசடிகளே காரணம்.

**வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் இளைஞர்களால் நடாத்தப்பெற்ற பொங்கல் பாரம்பரிய விளையாட்டுக்களான கரப்பந்தாட்டம்,தலையணைச்சண்டை,மரதன்,சாக்கோட்டம்,பலூன் உடைத்தல், தேங்காய் துருவுதல்,முட்டி உடைத்தல்,கயிறிழுத்தல் என பலவகையான விளையாட்டுக்கள் இடம்பெற்றதுடன்,பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.**















# ஆஸி பழங்குடியின மக்களின் யாபூன் திருவிழாவில் ஈழத்தமிழர்கள்!




ஆஸ்திரேலியாவின் பழங்குடியினர் மற்றும் டோரஸ் தீவுகளின் கலாச்சாரங்களின் மிகப்பெரிய ஒரு நாள் கொண்டாட்டமான "யாபூன் திருவிழா" (YABUN FESTIVAL 2024) சிட்னி நகர விக்டோரியா பூங்காவில் நடைபெற்றது.

ஆஸ்திரேலியா தினம் (Australia Day)
ஆண்டு தோறும் ஜனவரி 26இல் பரவலாக மக்கள் மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறி விட்டாலும், குறிப்பாக அபரோஜின பூர்வீக குடி மக்களுக்கு வேதனையளிக்கிறது. அதனைக் கொண்டாடுவது அவர்களிடத்தில் பாரிய துக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத்துக்க தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக பூர்வ குடி மக்களால்
இந்த நாள் 'யாபூன் திருவிழா' 2003 இல் தொடங்கப்பட்டதிலிருந்து ஆண்டுதோறும் சிறப்பம்சமாக இருந்து வருகிறது.

உலகின் பழமையான வாழ்க்கை கலாச்சாரத்தை தழுவிய சமூக கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, ஆஸ்திரேலியாவின் பழங்குடியின கலாச்சாரங்களின் மிகப்பெரிய கொண்டாட்டமான யாபூன் திருவிழா நடைபெற்றது.

இந்த ஆண்டின் கருப்பொருள், "உயிர்வாழ்தல், வழிகாட்டுதல், செழித்தோங்குதல்" (Surviving> Guiding> Thriving) என்பதாகும். பழங்குடியினர் மற்றும் டோரஸ் தீவுகளின் சமூகங்களின் நெகிழ்ச்சி மற்றும் வலிமையை குறிக்கும் நாளாக கொண்டாடபடுகிறது.

யாபூன் திருவிழா என்பது, பழங்குடியின கலாச்சாரங்களின் நீடித்த வலிமை மற்றும் துடிப்புக்கான ஒரு வாழ்க்கை சான்றாகும். கடந்த ஜனவரி 26 ஆம் திகதி, சிட்னி விக்டோரியா பூங்காவில் யாபூன் திருவிழாவில் ஈழத் தமிழ் மக்களும் கலந்து கொண்டு தமது ஆதரவினை தெரிவித்துக் கொண்டனர்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா








# இளையராஜாவின் மகள் பவதாரணியின் உடல் நல்லடக்கம்!

இசைஞானி இளையராஜாவின் மகளும், பின்னணி பாடகியுமான பவதாரணியின் உடல் நேற்று தேனி மாவட்டம் லோயாகேம்ப்பில் நல்லடக்கம் செய்யப் பட்டுள்ளது.

சிறுநீரக புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இலங்கையில் ஆயுர்வேத சிகிச்சை பெற்றுவந்த இளையராஜா வின் மகள் பவதாரணி நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

இதையடுத்து சென்னை விமான நிலையம் வந்தடைந்த பவதாரணியின் உடல் தியாகராய நகரில் உள்ள இளையரா ஜாவின் வீட்டிற்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு பொதுமக்கள் மற்றும் திரை பிரபலங்கள் அஞ்சலி செலுத்தினர்.

பவதாரணியின் உடல் இளையராஜாவின் தாய் சின்னத்தாய் மற்றும் மனைவி ஜீவாவின் சமாதி அருகே நல்லடக்கம் செய்யப் பட்டுள்ளது.

பவதாரணியின் தேசிய விருது பெற்ற பிரபல பாடலான 'மயில் போல பொண்ணு ஒன்னு. கிளிபோல பேச்சு ஒன்னு' என்ற பாடலை பாடியபடி இளையராஜாவின் தாய் மற்றும் மனைவியின் மணிமண்டபத்துக்கு நடுவில் பவதாரிணியின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.





# சாந்தன் வைத்தியசாலையில் அனுமதி!


ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையிலிருந்து விடுதலையான சாந்தன் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மஞ்சள் காமாலை பாதிப்பு அதிகரித்ததால் திருச்சி யில் இருந்து சென்னை அழைத்து வரப்பட்டு மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறையில் இருந்து விடுதலையான பிறகு திருச்சி இலங்கை அகதிகள் மறுவாழ்வு முகாமில் சாந்தன் தங்கி உள்ளார்.

இதேவேளை கல்லீரல் சிறுநீரக பாதிப்பிற்கு உள் ளான சாந்தனிற்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட வில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் மோசமான உடல்நலக் குறைவால் திருச்சி அரச மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்த அவர் தற்போது சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.



விளம்பர தொடர்புகளுக்கு
+94 777 163990

# சனத் நிஷாந்தவின் மரணத்தில் சந்தேகம் : கொலையென குற்றச்சாட்டு!

கட்டுநாயக்க நெடுஞ்சாலை விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணம் தொடர்பில் பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் இயற்கையாக நிகழ்ந்த விபத்தில் உயிரிழுந்தாரா அல்லது திட்டமிட்டு கொல்லப்பட்டாரா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்த சனத் நிஷாந்த தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி கட்சியை சேர்ந்தவர்கள் மிகவும் மோசமான கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர். அதனால்தான் இந்தசந்தேகம் அதிகமாக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனத் நிஷாந்தவின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்து வதற்காக அவரது இல்லத்திற்கு சென்ற போது ஊடகங்களின் முன்னிலையில் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.



# முதல் பயணத்தை ஆரம்பித்த உலகின் மிகப்பெரிய கப்பல்!

அமெரிக்காவிலுள்ள றோயல் கரீபியன் கப்பல் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பிரமாண்ட பயணிகள் கப்பல் மியாமி துறைமுகத்தில் இருந்து தனது முதல் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் தெற்கு புளோரிடாவிலிருந்து புறப்பட்டு, வெப்ப மண்டல தீவுகளைச் சுற்றி 7 நாட்கள் பயணம் செய்ய உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கப்பலுக்கு காற்பந்து வீரரான லியொனல் மெஸ்சி மற்றும் அமெரிக்காவில் உள்ள காற்பந்து கழகமான இன்டர் மியாமி (Inter Miami) குழுவினர் மூலம் "ஐகொன் ஒப் த சீஸ்" (Icon of the Seas) என்று அதிகாரபூர்வமாக பெயர் சூட்டப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய பயணிகள் கப்பல் என்று கூறப்படும் இந்த கப்பலானது சுமார் 1,200 அடி நீளம் கொண்டதாகவும் மொத்தம் 20 தளங்களுடன் காணப்படுகின்றது. இந்த கப்பலில் 6 நீர் சறுக்குகள், 7 நீச்சல் குளங்கள், பனி சறுக்கு வளையம், தியேட்டர் மற்றும் 40 இற்கும் மேற்பட்ட உணவகங்கள், பார்கள், ஓய்வறைகளை கொண்டமைந்துள்ளதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறித்த கப்பலில் 2,350 பணியாளர்களுடன் அதிகபட்சமாக 7,600 பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும் என குறிப்பிடப்படுகின்றது.

பயணிகள் கப்பல் குறித்து றோயல் கரீபியன் குழுமத்தின் தலைவர் ஜேசன் லிபர்டி கூறுகையில்,

"ஐகொன் ஆப் த சீஸ்" என்பது 50 ஆண்டுகளுக்கும் மேலான எங்கள் கனவுகள், புதுமைகள் மற்றும் முயற்சிகளின் வெளிப்பாட்டுடன் உலகின் மிகச் சிறந்த விடுமுறைக்கால அனுபவங்களையும் இது வழங்கும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# நீதிமன்றத்துக்குப் போகப்போவதாக மிரட்டிய சுமோவும், எதற்கும் தயாரென்று சீறிய சிறீதரனும்!

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவிக்காக நடைபெற்ற இழுபறிகள் பற்றிய செய்திகள் பல வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. பொதுவாகவே ஒரு அரசியல் கட்சிக்குள் இடம்பெறுகின்ற கோஷ்டி மோதல்கள், இராஜதந்திர வியூகங்கள் இருப்தென்பது எல்லாம் ஜனநாயகச் செயற்பாடுகளாகவே பார்க்கப்படுகின்றன. ஆனால், செயலாளர் தெரிவில் நடைபெற்ற சில வினோதமான சம்பவங்கள் பற்றி கவலையுடன் கருத்துத் தெரிவித்திருந்தார்கள் தமிழரசுக் கட்சியின் சில முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் வடக்கைச் சேர்ந்தவராக இருந்தால் கட்சியின் பொதுச்செயலாளர் கிழக்கைச் சேர்ந்தவராக தெரிவுசெய்யப்படுவது என்பது கட்சியின் ஒரு மரபாகவே இருந்துவருகின்றது. ஏற்கனவே கட்சியின் தலைவர் (சிறீதரன்) வடக்கைச் சேர்ந்தவராக இருப்பதால், கட்சியின் பொதுச்செயலாளராக கிழக்கைச் சேர்ந்த ஒருவரே தெரிவுசெய்யப்படவேண்டும் என்பதில் அனைவருமே ஒருமனமாக இருந்தவந்த நிலையில், திடீரென்று கட்சியின் செயலாளராக போட்டியில் களமிறங்கியிருக்கின்றார் சுமந்திரன். இதனால் தமிழசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டதாகவும், சுமந்திரனின் ஆதரவாளர் என்று கூறப்படுகின்ற குகதாசனைத் தெரிவு செய்ய மத்தியகுழு சம்மதித்ததைத் தொடர்ந்து சுமந்திரன் போட்டியில் இருந்து பின்வாங்கியதாகவும் தெரியவருகின்றது. ஏற்கனவே கிழக்கை வஞ்சித்தார் என்கின்ற குற்றச்சாட்டில் சுமந்திரனுக்கு எதிரான பலமான உணர்வலைகள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இருந்து வருகின்ற நிலையில், கிழக்கிற்கு வழங்கப்பட இருந்த செயலாளர் பதவிக்கு தானும் போட்டிபோட முன்வந்ததானது ஒருவகையில் கிழக்கிற்கு சுமந்திரன் செய்ய முற்பட்ட துரோகம் என்றே கூறுகின்றார்கள் மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

மட்டக்களப்புக்கு செயலாளர் பதவி வந்துவிடக்கூடாது என்பதில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மிக மும்முரமாகச் செயற்பட்டதாக கூட இருந்தவர்கள் கூறுகின்றார்கள். கட்சியின் செயலாளர் பதவி யாருக்குப் போனாலும் பறவாயில்லை மட்டக்களப்புக்கு, குறிப்பாக சிறீனேசனுக்குப் போய்விடக்கூடாது என்று அந்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியத்தனமாகச் செயற்பட்டதாகக் கூறுகின்றார்கள்.
வளமை போலவே தமிழரசுக் கட்சியின் தெரிவில் மாவை சொதப்பியதாகக் கூறுகின்றார்கள் மத்திய குழு உறுப்பினர்கள். கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது என்று அறிவித்து வாக்களிக்கும் பலர் வெளியேறியபின்னர், செயலாளருக்கான வாக்கப்பை நடத்தியுள்ளார் மாவை.
கட்சியின் செயலாளர் போட்டியில் நின்ற சிறினேசனிடம் விடுக்கொடுக்கும்படி கெஞ்சியிருக்கின்றார் தற்போதைய கட்சியின் தலைவர் சிறிதரன். சிறிதரனும் சொஞ்சம் கொஞ்சமாக 'மாவையாக' மாறுகின்றாரா என்று கேள்வி எழுப்புகின்றார்கள் சில உறுப்பிர்கள்.
கூட்டம் முடிவடைந்ததைத் தொடர்ந்து 'தான் கட்சிக்கு எதிராக வழக்குப் போடப்போவதாக' சிறீதரனை மிரட்டி இருக்கின்றார் 'சுமோ' என்ற சட்டமேதை. அதைப்பற்றியெல்லாம் கவலையில்லை.. இந்த மிரட்டலுக்கெல்லாம் நான் அஞ்சமாட்டேன் என்று என்று கூறிவிட்டு வாகனத்தில் ஏறிச் சென்றிருக்கின்றார் சிறீதரன்.
பொதுச்செயலாளருக்கான வாக்கெடுப்பை சுமந்திரனே நடாத்தியதாகவும், வாக்களித்தவர்களில் பலர் இரண்டு கைகளையெல்லாம் தூக்கியதாகவும் தெரியவருகின்றது. வேடிக்கை பார்ககவந்தவர்கள், உணவுபரிமாறியவர்கள் என்று கட்சிக்கே சம்பந்தம் இல்லாதவர்கள் கூட அந்த வாக்களிப்பில் கலந்துகொண்டதாகக் கூறிச் சிரிக்கின்றார்கள் அங்கிருந்தவர்கள்.
ஐயா சிறீதரன் அவர்களே!! தமிழரசுக் கட்சியைப் பார்த்து ஊரே சிரிப்பதற்கு முன்னதாக ஏதாவது செய்யுங்கள்!!



# ஆரையம்பதி ஆரையூர் விளையாட்டுக்கழகத்தில் மாபெரும் இரத்த தான முகாம்!

மண்முனைப்பற்று ஆரையம்பதி ஆரையூர் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு ஆரையூர் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் பாலேந்திரன் பாணுபாரதி தலைமையில் ஆரையம்பதி இராம கிருஷ்ணன் மிஷன் மகாவித்தியாலயத்தில்

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் திருமதி தட்ஷண கௌரி டினேஷ் கலந்து கொண்டார்.

உதிரம் கொடுத்து உயிர் காப்போம் எனும் தொனிப் பொருளில் இக்கழக வீரர்கள் உதிர தானத்தை மேற்கொண்டனர்.

இந் நிகழ்வில் ஆரையம்பதி கந்தசுவாமி ஆலய உதவி குரு உமாபதசர்மா, மாவட்ட இரத்த வங்கி வைத்தியர் கே.விவேகானந்தன், ஆரையம்பதி இராம கிருஸ்ணன் மிஷன் மகாவித்தியாலய அதிபர் எஸ்.ரவிச்சந்திரன், ஆரையூர் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி இரத்த தான முகாமில் கலந்து கொண்டவர் களுக்கு ஆரையூர் விளையாட்டுக் கழகத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவுள்ள ஒப்பந்தம்!

இந்தியாவுடனான ‘எட்கா’ ஒப்பந்தம் இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் கைச்சாத்திடப்படும் என இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

ஒப்பந்தத்தை மேற்கொள்வது தொடர்பாக தற்போது இருநாடுகளும் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு வருகின்றன.

இரு நாடுகளின் வர்த்தகத்தை மேம்படுத்தும் வகையில் சுங்க வரிகளை மேலும் குறைப்பது மற்றும் ஏற்றுமதியில் உள்ள சுங்கவரி அல்லாத தடைகளை நீக்குவது குறித்து கலந்துரையாடப் பட்டது.

இதன் கீழ், இந்தியா 90% வரை வரிகளை குறைக்க எதிர்பார்க்கிறது. இலங்கை 80% வரை வரிகளை குறைக்க எதிர்பார்க்கிறது.



**விளம்பர** தொடர்புகளுக்கு
**Mobile : +94 777 163990**

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சட்ட மாநாடு!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அதன் கல்விப்பணியின் பிறிதொரு மைல் கல்லாக சட்ட மாநாடு ஒன்றை நடாத்துகின்றது.

குறித்த மாநாடானது நேற்று (27) மற்றும் இன்று (28) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கத்தில் இடம்பெறுகின்றது.

நெருக்கடிகளுக்கூடான வழிகள் என்னும் தொனிப்பொருளில் இந்த மாநாடானது வடிவமைக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாண சட்ட மாநாட்டின் நோக்கங்களாக சட்டப் பரப்பில் அதிகம் பேசப்படாத விடயங்களைப் பேசுதல், பன்மைத்துவ ஆய்வை ஊக்குவித்தல், அவ்வகை ஆய்வு முயற்சிகளை கலந்துரையாடுவதற்கான களமொன்றை அமைத்தல், சட்டப் புலமையாளர்கள் மற்றும் ஆய்வாளர்களையும் அவர்களது ஆய்வுச் சிந்தனைகளையும் ஒன்றிணைக்க வேண்டும்.

மேலும், எழுத்திலுள்ள சட்டத்திற்கும் அதன் செயற்பாட்டிற்குமான இடைவெளியைக் குறைத்தல், சட்ட மாணவர்களுக்கு சட்டத்துறை சார் ஆய்வுச் சிந்தனைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் துறைசார் நிபுணர்களுடனான வலையமைப்பை ஏற்படுத்தல் ஆகிய பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறித்த மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கையின் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம் மற்றும் கௌரவ விருந்தினராக ஐக்கிய நாடுகளின் முன்னாள் நேருதவிச் செயலாளரும் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடு தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியுமான ராதிகா குமாரசுவாமியும் கலந்து சிறப்பிக்கின்றனர்.
மாநாட்டின் முதல் நாள் சிறப்பு நிகழ்வாக ஜனாதிபதி சட்டத்தரணி கனகீஸ்வரன் மற்றும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் சொர்ணராஜா அவர்களது சிறப்புரைகள் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் பகிரங்க சட்டத்தின் எதிர்காலம் மற்றும் அதன் நெருக்கடிகளும் சவால்களும் என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்வொன்றும் நடைபெறவுள்ளது.
மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத் துறையானது 2005 ஆம் ஆண்டிலிருந்து சட்டமாணிப் பட்டத்தை வழங்குகின்ற ஒரு உயர் கல்வி நிறுவனமாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.










# யாழில் ஆரம்பமான புகைப்பட கண்காட்சி!

யாழ்ப்பாண புகைப்பட கண்காட்சி கடந்த தினம் ஆரம்பமாகியுள்ளது. குறித்த கண்காட்சியானது யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் அமைந்துள்ள களம் எனும் இடத்தில் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. புகைப்பட கண்காட்சி இந்த புகைப்பட கண்காட்சி எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:
CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road,
Jaffna.Tel : 021 222 7557

SCAN ME